ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1947/13 - 2015 දෙසැම්බර් මස 29 වැනි අඟහරුවාදා - 2015.12.29

*1947/13 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 29 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (அத்தியாயம் 423) கீழான அறிவித்தல்**

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு17 இன் துணைப் பிரிவுகள் (1) மற்றும் (2) இன் கீழ் எனக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கிணங்க, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகிய நான் பின்வருமாறு கட்டளையிடுகின்றேன்.

(1) வதிவற்றோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதிவோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு, வதியும் இலங்கையரல்லாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கு மற்றும் வெளிநாட்டுச் செலாவணி உழைப்போர் கணக்குகளைப் பேணும் இலங்கையில் வதியும் நபர்களுக்கு மேலேயுள்ள கணக்குகளிலுள்ள நிலுவைத் தொகையினைப் பயன்படுத்துவதன் மூலம் இலங்கைக்கு வெளியில் வழங்கப்பட்ட பிணையங்களைக் கையேற்பதற்கும் வைத்திருப்பதற்கும் கைமாற்றுவதற்கும் அனுமதி வழங்கப்படுகின்றது.

(2) மேலே பந்தி (1) இல் குறிப்பிடப்பட்ட இலங்கையில் வதியும் நபர்களுக்கு ஒதுக்கங்களை அல்லது பங்குகள் மீதான நன்மையொன்றாக நடப்பாண்டு இலாபங்களை மூலதனமாக்குவதன் மூலம், அல்லது இத்தால் வழங்கப்பட்ட ஏற்பாடுகளின் நியதிகளில் முன்னர் கையேற்கப்பட்ட பங்குகளின் துணைப்பிரிவு அல்லது பிரிப்பின் மூலம் வழங்கப்பட்ட பங்குகளை கையேற்பதற்கும் வைத்திருப்பதற்கும் கைமாற்றுவதற்கும் இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது, மற்றும்

(3) இதற்கு மேலதிகமாக இத்தால் வழங்கப்பட்டுள்ள அனுமதியானது 01.01.2011 இன் 1686/50 ஆம் இலக்க வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட விதிமுறைகளில் கூறப்பட்ட ஏற்பாட்டு நியதிகளுக்கு மேலதிகமானதாகும்.

ரவி கருணாநாயக்க,
நிதி அமைச்சர்.

நிதி அமைச்சு,
கொழும்பு,
2015, திசெம்பர் 21.

1- 502



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.